**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**அசல் வழக்கு எண்.40/2019**

**பி.வா.சா.1**

நாள்: **22.01.2026**

2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 22ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முகைதீன் அப்துல்காதர் | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

<u>முதன்மை விசாரணை:</u>

நான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி. எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

<u>ஆவணங்கள்</u>

| வ.எண் | தேதி | ஆவணங்கள் | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1) | | பி.சா.ஆ.1 | DMC, இராமநாதபுரத்தில் OS No. 14/1983 வழக்கு தீர்ப்புரை மற்றும் சார்பு நீதிமன்ற AS No. 43/1987 வழக்கின் தீர்ப்புரை ஆகியவற்றை கேட்டு கொடுத்த நகல் மனு எண்.1806/2025 | அசல் |
| 2) | 17.09.1985 | பி.சா.ஆ.2 | DMC, இராமநாதபுரத்தில் OS No. | ஜெராக்ஸ் |



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.22 17:18:42 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 14/1983 வழக்கில் பிறப்பித்த தீர்ப்புரை | நகல் |
| 3) | 25.11.1987 | பி.சா.ஆ.3 | AS No. 43/87 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை | ஜெராக்ஸ் நகல் |
| 4) | 21.02.2023 | பி.சா.ஆ.4 | SA No. 1211/1990 வழக்கில் பிறப்பிக்கப்ப்டட தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |
| 5) | 21.02.2023 | பி.சா.ஆ.5 | SA No. 1211/1990 வழக்கில் பிறப்பிக்கப்ப்டட தீர்ப்புரை | சான்றிட்ட நகல் |
| 6) | 12.12.2007 | பி.சா.ஆ.6 | இராமநாதபுரம் சார்பு நீதிமன்ற OS.No. 17/2005 வழக்கில் பிறப்பித்த தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |
| 7) | 12.12.2007 | பி.சா.ஆ.7 | இராமநாதபுரம் சார்பு நீதிமன்ற OS.No. 17/2005 வழக்கில் பிறப்பித்த தீர்ப்புரை | சான்றிட்ட நகல் |
| 8) | 13.02.2015 | பி.சா.ஆ.8 | DMC இராமநாதபுரம் IA No. 308/2013 in OS No. 14/1983 ல் பிறப்பித்த உத்தரவு | சான்றிட்ட நகல் |
| 9) | 13.02.2015 | பி.சா.ஆ.9 | DMC இராமநாதபுரத்தில் IA No. 308/2013 in OS No. 14/1983 ல் பிறப்பித்த இறுதிநிலை தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |
| 10) | -- | பி.சா.ஆ.10 | DMC இராமநாதபுரம் IA No. 308/2013 in OS No. 14/1983 ல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் பிளான் | சான்றிட்ட நகல் |
| 11) | 02.04.2009 | பி.சா.ஆ.11 | இராமநாதபுரம் ADJ நீதிமன்றத்தில் AS No.26/2008 ல் பிறப்பித்த தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |
| 12) | 02.04.2009 | பி.சா.ஆ.12 | இராமநாதபுரம் ADJ நீதிமன்றத்தில் AS No.26/20080 ல் பிறப்பித்த தீர்ப்புரை | சான்றிட்ட நகல் |
| 13) | 11.09.2015 | பி.சா.ஆ.13 | நான் 2 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த இனாம் | ஜெராக்ஸ் நகல் |



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.22 17:18:45 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செட்டில்மெண்ட் ஆவணம் | |

மேற்படி ஆவணங்களில் பி.சா.ஆ.2, 3 ஆகிய ஆவணங்கள் ஜெராக்ஸ் நகல்கள் என்றும், அவற்றை குறியீடு செய்ய முடியாது என்றும் வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார். மேற்படி ஆட்சேபனையை கேட்டு பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல்கள் கேட்டு இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் நகல் மனு தாக்கல் செய்ததாகவும், ஆனால் மேற்படி ஆவணங்கள் அழிக்கப்பட்டதாக மனு திருப்பப்பட்டதாகவும், அந்த நகல் மனுவினை பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்துள்ளார். அதனால் தன்னிடம் இருந்த ஜெராக்ஸ் நகல்களை 1ம் பிரதிவாதி தாக்கல் செய்வதாக கூறுகிறார். மேற்படி காரணம் ஏற்றுக்கொள்ளும்படி உள்ளதால், மேற்படி ஆட்சேபனைக்குட்பட்டு மேற்படி ஆவணங்களை குறியீடு செய்யலாம் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

தவிரவும், பி.சா.ஆ.13 ஜெராக்ஸ் நகல் என்பதால் அதை குறியீடு செய்வதற்கும் வாதி தரப்பு வழக்குரைஞர் ஆட்சேபனை தெரிவித்தார். மேற்படி ஆவணம் அசல் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்து அவரிடம் உள்ளது என்றும், அவரிடம் இருந்து பெற்ற ஜெராக்ஸ் நகலை பெற்று தாக்கல் செய்துள்ளதாகவும் 1ம் பிரதிவாதி தரப்பு வழக்குரைஞர் தெரிவித்தார். மேற்படி 1ம் பிரதிவாதி ஆவணத்தை எழுதிக்கொடுத்தவர் என்பதால் அவரிடம் அசல் இருக்க வாய்ப்பில்லை ஆனாலும், பதிவு அலுவலகத்தில் இருந்து பதிவு நகல் வாங்கி தாக்கல் செய்திருக்கலாம் எனவே, மேற்படி ஆவணத்தின் ஏற்றுக்கொள்ளும் தன்மையை பொறுத்து பின்னர் தீர்மானிக்கப்படும் என்றும், மேற்படி ஆட்சேபனைக்குட்பட்டு ஆவணத்தை குறியீடு செய்யலாம் என்றும் இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.22 17:18:47 +0530

வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.22 17:18:50 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம் .